ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்ய தர்மம்.

ஓர் ராஜாங்கம் ஸகல பரிவாரங்களுடனும் ஸகல அங்கங்களுடனும் விளங்கிக்கொண்டு ஆக்ஞைசெய்துகொண்டிருக்கும்பொழுது, அது இல்லையென்றாவது, அதனை அனுஸரிப்பவர் மதியீனரென்றாவது, நம்போலிய புத்திமான்கள் அதையனுஸரிப்பது உசிதமில்லாத காரியமென்றாவது குருகிய புத்தியைக்கொண்டு நிச்சயித்துவிடுவது நியாயமில்லாததாகும். வேதமென்னும் பிரமாணராஜன் ஸகல அங்கங்களுடனும், நியாய மீமாம்ஸாதிகளான பரிவாரங்களுடனும் விளங்கிக்கொண்டு வர்ணாசிரம தர்மங்களை விதிக்கும்பொழுது வேதமே பிரமாணமில்லையென்றாவது, அதனையவலம்பித்த நம்முன்னோர் மூதறிஞரல்லரென்றாவது, தற்காலத்திய மேதாவிகள் அதை ஒப்புக்கொள்வது சரியல்லவென்றாவது நினைத்துக்கொள்வது முன்கூறியதுபோலவேயாகும். ஆனால் வர்ணாச்சிரமதர்மத்தை நாடுவது தேசஸேவை செய்பவர்களுக்கு விரோதப்படுமேயெனில் அப்பொழுது தர்மஸேவிகளுக்கும் தர்மத்தை விடுவது விரோதிக்கும். தேசசேவிகள் ஜாதிபேதமிருக்கக்கூடாதென்று நினைத்தால் பூமண்டலவாஸிகள் யாவரும் ஜாதிபேதமின்றி ஒரே ஜாதியாக மாறவேண்டுமென்றாகிறது. அப்படியானால் இப்பொழுதுகாணப்படும் ஜாதிகளுள் எதாவதொன்றைக் கடைபிடிக்கவேண்டும். ஆகவே முதலில் எவர் ஜாதியை மாற்றுகிறது? கிரிஸ்தவர் தன் ஜாதியை மாற்றிக்கொள்வாரா? அல்லது முஸ்லிம்கள் முதலில் மாற்றுவார்களா? வெள்ளைக்காரர்கள் அந்த நிலைமைக்கு வருவார்களா? ஒருவரும் வரமாட்டார்கள். அப்பொழுது ஹிந்துக்களுள் காணப்படும் ஜாதிபேதத்தை அழித்துவிட்டுக் கீழ்க்கூறிய ஜாதிகளொன்றாக மாறவேண்டும் அப்பொழுதும் ஜாதிபேதமொழியாது. கிரிஸ்தவர், மகம்மதியர், வெள்ளைக்காரர் என்ற ஜாதிப்பிரிவினையைமாற்ற சீர்திருத்தக்காரர்களால் முடியாது. ஹிந்துக்களின் ஜாதியை மாத்திரம் மாற்றிவிடுவது ஜாதிபேதத்தை ஒழித்துவிடுவதாகுமா? அப்படியானால் ஹிந்துக்களின் ஜாதியைமாத்திரம் மாற்றக்கருதுபவர் வேறு சிலரையாவது அன்னியர்களெனச் சொல்லமுடியாது. எல்லாம் ஒரே ஜாதியாய் விட்டதாகவல்லவா அவர்களது தோற்றம். அப்பொழுது அன்னிய ஸாமான்களை பஹிஷ்காரம்செய்யவேண்டுமென்று சொல்லுக்கு அர்த்தமில்லை. இந்தப்பேச்சுக்கு அர்த்தமுண்டானால் ஹிந்துக்களின் ஜாதிபேதத்தை மாற்றவேகூடாதென்று நிலைக்கிறது. ஆகவே திருத்தக்காரர்களே ஜாதிபேதத்தை அங்கீகரிப்பவர்களுள் முதன்மையடைகிறார்கள். அப்படியிருக்கையில் சில கர்ணாடகக்காரர்கள் ஜாதிபேதத்தை அழிக்கமாட்டோமென்றார்களேயென்று அவர்களிடம் வீணாகப்பழி கூறுவதில் பிரயோஜனமில்லை. ஜாதிபேதமொழியுங்காலம் பிரளயகாலமே. இதை இப்பொழுதே எதிர்பார்ப்பது எப்படி? ஆகையால் பிரமாணாதீனமாய் வந்ததும்: பிராசீனமாய் வழங்கிவந்ததும், பெரியோர்கள் கொண்டாடினதுமான ஜாதிபேதத்தை அனுஸரித்தே யாவரும் அதற்குரிய வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டிப்பார்களாக.

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

பிரமோத-௵ மார்கழி௴ ௧௦௨

## வேதம்.

ஆஸ்திகர்களான ஆர்யவைதிகர்கள் எவ்விஷயத்தையும்வேதமென்ற பிரமாணத்தை முன்னிட்டே ஸாதிக்கவேண்டியதாயிருப்பதுபற்றி வேதவிஷயமாயிங்கு சிறிது கூறுவாம். வேதமென்பது பிரமாணங்களுள் சிறந்த பிரமாணம். பிரத்தியக்ஷம் முதலிய பிரமாணங்கட்கு தோஷசங்கை ஸம்பவிக்கின்றதாகலின் அவை சிறந்தப் பிரமாணமன்று. இங்குஇது நாஸ்திகர்களின் ஆக்ஷேபம். பிரத்தியக்ஷப் பிரமாணத்தாலேயே எல்லாவற்றிற்கும் நிர்வாஹம் சம்பவிப்பதால் வேறு பிரமாணங்களை யொப்புக்கொள்வது பயனற்றதாகும். சிலர் அங்கீகரிக்கின்றார்களே யெனின் அவர் அறிஞரல்லர் என நாஸ்திகர்களின் கூற்று. "அக்னிஹோத்திரம், மூன்று வேதங்கள், தண்டந்தரித்தல், திருநீறு பூசுதல் இவை யாவும் புத்தி, பௌருஷமிழந்து பிழைக்க வழியறியாமல் விழிக்கும் பேதையருக்குப் பிழைக்கும் வழியென பிருஹஸ்பதி கூறுகின்றார்" என நாஸ்திகர் வைதிகரைப் பழிக்கின்றனர். அங்ஙனமாயின், ஆத்மா, தர்மாதர்மம், மறுபிறப்பு, லோகாந்தரம், பந்தம், மோக்ஷம் இவை யாதொன்றுஞ் சித்திக்காதேயெனின் சித்திக்கவேண்டாம். அவையாவும் பிரத்தியக்ஷத்தால் அறியப்படாமையால் கானல்நீர், மலடிமகன் இவைகட்கொப்பானதே. இவை சித்திக்காமற்போனால் யாதொரு கெடுதியுமில்லை. ஆகையால் பிரத்தியக்ஷமொன்றே பிரமாணம். கண்டதே காக்ஷி, கொண்டதே கோலம் வேதம் முதலியவை பிரமாணமல்ல. அதனாலறியக்கூடிய லோகாந்தரம் முதலியவையொன்றும் வஸ்துவல்ல என நாஸ்திகர் பிதற்றுகின்றனர். அவருக்குச் சமாதானம் கூறுவாம். பிரத்தியக்ஷத்தாலேயே எல்லாவற்றையும் நிர்வஹிக்கலாமென்று நாஸ்திகர் கொண்டது மதிமயக்கத்தாலாம். பிரத்தியக்ஷத்தால் எதிரிலிருக்குஞ் சில விஷயங்களை மாத்திர மொருவாறறியலாமேயன்றி

எல்லா வஸ்துக்களையுமறியமுடியாது. எதிரிலிருக்கும் வஸ்த்துக்களோ அற்பமானவை. காலத்தாலும் தேசத்தாலும் வெகுதூரம் விலகியுள்ள வஸ்துக்கள்தான் மிகுந்தவை அவைகளை அநுமானம் ஆகமம் முதலிய ஒவ்வொரு பிரமாணங்களால் கண்டறிந்து உலகத்தார் வியவகாரஞ்செய்து வருகின்றனர். இது நாஸ்திகமதத்தில் பொருந்தாது. வெகு தூரதேசத்திலுள்ளதும் வெகுகாலத்திற்கு முன்னும் பின்னுமுள்ளதுமான விஷயத்தை நாஸ்திகர் வியவகரிப்பதில்லையெனச் சொல்ல முடியாது. நாஸ்திகன் தனது முப்பாட்டனைக் காணாவிடினும் எனக்கு முப்பாட்டனிருந்தானென்றே அறிகிறான். அங்ஙனமே வியவகரிக்கின்றான். அதுபோல் தேசாந்தரம் போய் தனது க்ஷேமசமாசாரங்களை பத்திரிகை மூலமாயறிவிக்கும் பந்துக்களை நாஸ்திகன் அவர்களிருக்கின்றதாகவே நம்புகிறான். இவையெல்லாம் பிரத்தியக்ஷத்தாலேற்படுவதில்லை. வேறு பிரமாணத்தை யொப்புக்கொள்ளாத நாஸ்திகன் இவையெல்லாம் எப்படி நம்பக்கூடும்.

அன்றியும் எதிரிலுள்ள வஸ்துக்களில் எல்லாவற்றையும் பிரத்தியக்ஷத்தாலறிய முடிகிறதில்லை. அதெங்ஙனமெனின் எதிரிலுள்ள வஸ்து வெகு ஸூக்ஷ்மமாயின் கேசத்துனுக்குபோல் அறியப்படுகிறதில்லை. வெகு ஸமீபத்திலுள்ளதாயின் கண்ணிலிட்ட மைபோல் காண்பதில்லை. வெகுதூரஞ் சென்றதாயின் ஆகாயத்தில் பறக்கும் பறவைபோல் பார்க்கப்படுவதில்லை. வெகு ஸமீபத்திலில்லாமலும் வெகுதூரத்திற் செல்லாமலும் சரியான இடத்திலிருக்குமாயினும் மனது சமாதானப்படாவிடின் தெரிகிறதில்லை. ஆதல்பற்றி பிரத்தியக்ஷத்தாலேயே எல்லாவற்றையும் அறிந்து விடலாமென்பது சரியன்று. அன்றியும் பிரத்தியக்ஷப் பிரமாணம் சிலகாலத்தில் வஸ்துக்களை உள்ளபடி விளக்குகின்றது. சிலகாலத்தில் பதார்த்தமோர்விதமாயிருக்க அதை வேறுவிதமாக விளக்குகின்றது. கண் காது முதலிய இந்திரியங்களையே பிரத்தியக்ஷப்பிரமாணமென்பர். அவைகள் வஸ்துக்களை உள்ளபடி விளக்கவில்லையென்பது பழுதையில் பாம்பையும் சிப்பியில் வெள்ளியையும் பாலைவனத்தில் கானல்நீரையும் கண்டவர்க்குப் புலப்படாமற் போகாது. ஆகையால் இந்திரியங்கட்குப் புலப்படாதவைகளை யநுமானத்தாலும் அதனாலுமறியப்படாதவைகளை ஆகமத்தாலும்

(இங்கு ஆகமம் என்ற சொல்லால் வேதப்பிரமாணமென்ற சப்தப் பிரமாணம் வழங்கப்படும்.) அறிந்துகொள்ளவேண்டு மென்பது ஆன்றோர்கூற்று. அங்ஙனமே சாகமுனிதிஸ்ரைஷிணீயாத்தியாயத்தில் கூறியுள்ளார். "சிலர் பிரத்தியக்ஷத்தையே பிரமாணமாகக் கொண்டு மறு பிறப்பு முதலானவை பரோக்ஷமாயிருப்பதுபற்றி அவையில்லையென்றே சொல்லுகின்றார்கள். அது தப்பு. புத்திமானாயுள்ளவன் சம்சயத்தையும் நாஸ்திகக்கொள்கையையும் விடவேண்டும். ஏனெனில் பிரத்தியக்ஷமாயுள்ள வஸ்து ஸ்வல்பம். பரோக்ஷ வஸ்துக்களே மிகுதியாயுள்ளவை. அவை ஆகமானுமானங்களால் அறியப்படுகின்றன. நாஸ்திகக்கொள்கை பாதகங்களைக்காட்டிலும் மகாபாதகமாம். ஆகையாலதை விட்டொழித்து மறுபிறப்பு முதலானவைகளை ஆகமானுமானங்களால் பரீக்ஷித்து நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியது" என்று. பிரத்தியக்ஷந்தவிர வேறு பிரமாணமில்லையெனக்கொள்ளின் உலகவியவகாரம் யாதொன்றும் நடக்கமாட்டாது. உலகத்தில் சகலப்பிணிகளும் கீழ்நடந்ததை திருஷ்டாந்தமாகக்கொண்டுவரப்போகின்ற காரியங்களில்ஐயமறப் பிரவிருத்திசெய்து கஷ்டத்தைவிலக்கி இஷ்டத்தையடைகின்றன. மிருகஜாதியான பசுக்களும் தான் அருந்திய புல்மாதிரியான பச்சைப்புல்லைக் கையிலேந்தி வருபவனைநோக்கி நமக்குஅனுகூலமான புல்லைக்கொண்டு வருகிறானென்றுணர்ந்து அவனுக்கெதிரில் வருகின்றன. தடியையெடுத்து வருபவனை பார்த்து வெருண்டோடுகின்றன. அதேன்? எற்கனவே தானடிபடும்பொழுது தனக்கு அனிஷ்டமென தடியை அனுபவித்தமையால் அதுபோலிதுவும் துன்பத்தை விளைவிக்குமென்றெண்ணியல்லவா ஓடுகின்றன. இங்ஙனம் பசுக்களுக்கே அனுமானத்தால் இஷ்டஸாதனத்தில் பிரவிர்த்தியும் அனிஷ்டஸாதனத்திலிருந்து நிவர்த்தியுமேற்படுவதைக்கண்டும் பிரத்தியக்ஷந்தவிர வேறு பிரமாணமில்லையெனக் கொள்ளும் நாஸ்திகக்கொள்கை மஹாபாதகமென மொழிந்தார் சாகமுனி. பிரமாணத்தின் லக்ஷணமில்லாமையால் ஆகமாதிகளை பிரமாணமாகக் கொள்ளவில்லை என்பதும் சரியல்ல. அறிவையுண்டுபண்ணுவதெதுவோ அதுபிரமாணம் என்றல்லவா பிரமாண லக்ஷணம். இந்த லக்ஷணம் சப்தப்பிரமானமெனப்படும் ஆகமத்திலுமுளதே. அது இல்லையெனக் கூறுவாராயின் அவரை இது

கேட்பாம். லௌகிக சப்தங்கள் பிரமாணங்களா, அன்றா? அன்றேல் எம்மோடு அவர்வாதம் செய்வதற்குரியவரல்லர். ஏனெனில் வாதமென்பது ஒருவர் சொல்லுவதை அறிந்துகொண்டு அதற்குத் தக்கவாறு உத்தரஞ் சொல்லுவதாகும். சப்தத்திற்கு அறிவை உண்டுபண்ணுஞ் சக்தி இல்லையென்னும் வாதம் செய்பவர் சம்முடைய வாக்கியத்தினின்றும் எதையறிவார். என்னதானுத்தரங் கூறுவர். அவர் கூறும் வார்த்தைக்கும் பொருளை விளக்குஞ் சக்தியில்லையென்றல்லவா அவருடைய மதம். அங்ஙனமிருக்க தொண்டைக் கம்மிப்போகவா வாதாடுவது. லௌகிக சப்தத்திற்கு அறிவைபுண்டுபண்ண சக்தியுண்டு வைதிக சப்தங்கட்கதில்லையென்றால், வைதிக சப்தங்கள் என்ன குற்றம் செய்ததையா? அல்லது வைதிக சப்தங்களறிவைப்புகட்ட ஆரம்பிக்குங்காலெவரேனுந் தடிபோட்டு மறைக்கின்றனரோ? அஃதில்லையே? அப்படியிருக்க என்வைதிகசப்தங்களும் பிரமாணமாகா? லௌகிக சப்தங்கள் வேறு. வைதிக சப்தங்கள் வேறு. ஆகவே அதுபோலிது ஆகாது என்பதுங்கூடாது. "வைதிக லௌகிக சப்தங்கள் வெவ்வேறல்ல. ஒன்றுதான். அவைகளின் பொருள்களுமொன்றுதான். வேற்றுமையின்மையால் வெவ்வேறென்றால் லௌகிகங்களைக் கற்றுணர்ந்தோருக்கு வேத சப்தங்களைக் கேட்டால் பொருள் விளங்காமற்போகவேண்டும் அங்ஙனமில்லை" என பூர்வமீமாம்ஸை மூன்றாவது அத்தியாயத்தில் 10-வது அதிகாணத்தில் ஜைமினி கூறியுள்ளார். சிலருக்கு விளங்கவில்லையே என்றால் அவர்கள் சிக்ஷை முதலான கிரந்தங்களையும் விசேஷமாய் வியாகரணத்தில் வைதிகப் பிரக்கிரியை, ஸ்வரப்பிரக்கிரியை இவைகளையும் படிக்காதவர்களாயிருக்கலாம். அவர்களுக்கு வைதிக சப்தங்களின் பொருள் விளங்காமலிருப்பது உசிதமே. எவருக்குமே அது விளங்கவில்லையெனக் கோட்டான்போல் நினைப்பது தப்பு. அங்ஙனமாயின் வித்தியாரண்ணிய சுவாமிகள், பட்டபாஸ்கரர் முதலாயினோர் எங்ஙனம் வேதபாஷ்யமியற்றினர்கள். நமது பரமாசாரியாள் எங்ஙனமுபனிடதங்கட்கு பாஷ்யஞ்செய்தருளினர்கள். ஆகையால் லௌகிக சப்தம்போற்றான் வைதிக சப்தமும் அறிவையுண்டுபண்ணுவதால் பிரமாணமெனக் கொள்ள வேண்டும். இங்கிது சங்கை—அறிவையுண்டுபண்ணுவதால் மாத்திரம் பிரமாணமாகாது. ஆனால் ஒரு பிரமாணத்தால் அறி

யப்படாததும் ஒரு பிரமாணத்திற்காவது விரோதப் படாததும் ஒரு பயனுள்ளதுமான பொருளை விளக்குவதே பிரமாணமாகும். ஏனெனில் ஒரு பிரமாணத்தாலறியப்பட்டதைக் கூறினாலதைக் கேட்டவன் நமக்குத்தெரிந்ததைதான் கூறுகின்றானென்றெண்ணி அதை ஏற்றுக்கொள்வதில்லை. நெல்லினுள்ளரிசியிருக்கிறதென்றாலிதை எவரேனும் கேட்பரோ? அங்ஙனமே ஒரு பிரமாணத்திற்கு விரோதப்படுவதைக் கூறினால் அதையும் நம்புவதில்லை. நெருப்பு குளிர்ந்திருக்கும் என்றால் எவரேனும் நம்புவாரோ? அங்ஙனமே பயனற்றதைக் கூறினாலதை மதிப்பதில்லை. குட்டிச்சுவரின் கீழே கழுதை நிற்கிறதென்றால் யாரேனும் மதிப்பாரோ ஆகவே அறியப்படாமல் விரோதமற்ற பயனுள்ள வஸ்துவை போதிப்பதே பிரமாணமாகும். வேதத்திலோ பெரும்பான்மையாய் நம்மாலறியப்பட்டதும் பிரமாணங்கட்கு விரோதிக்கின்றதும் பயனற்றதுமான பொருள்களே கூறப்பட்டுள்ளன. அதெப்படியெனில் கூறலாம்—நெருப்பு பனிக்கு மருந்து, சூரியன் ஒண்டியாய் சுற்றுகிறார், சந்திரன் அடிக்கடி உண்டாகிறான், பூமி விரை விடுவதற்கோரிடம்'' இவைபோன்ற அநேக வாக்யங்களிருக்கின்றன. இவையாவும் எள்ளினுள் எண்ணெயிருக்கின்றது என்ற வார்த்தைக்கொப்பானதே தவிர அபூர்வமான உபதேசமன்று. இதுபோல் "ஆதித்யன் யூபம்'' என்பதாதி வாக்யங்களில் யாகத்தில் நட்டுவைக்கின்ற யூபஸ்தம்பத்தை சூரியனென்று சொல்லுகின்றது. இது பிரத்தியக்ஷ விரோதமுள்ளது. யூபஸ்தம்பம் ஓர் கட்டை அது எப்படி சூரியனாகும். இங்ஙனமே "அவர் (அக்கினி) அழுதார். அவர் ரோதனம் செய்தபடியால் ருத்திரனெனப்படுவர்'' என்பதாதி வாக்யங்களில் பயனற்ற கதை கூறப்படுகின்றது. அக்கினி அழுதாலென்ன, சிரித்தாலென்ன, அதனால் நமக்கு யாதுபயன். இங்ஙனம் வேதத்தில் வெகுவாய்க் காணப்படுவதால் வேதம் பிரமாணமாகாது என்ற ஆசங்கைக்கு இது சமாதானம்.

உலகத்தில் பிராணிகள் பற்பல விசித்திரமான சுக துக்கங்களையனுபவிக்கின்றனரென்பது யாவருமறிந்த விஷயம். அது இன்றியமையாத காரணமின்றி ஸம்பவிக்காதாகலின் அதற்கு அஸாதாரண காரணமொன்றிருக்கவேண்டும். அது பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்கட்கெட்டாது. இந்த விஷயம் 'மறுபிறப்பு"

என்ற நாமம்பூண்ட பிரஸங்கத்தில் விரிவாய்க் காணவேண்டியதா கலின் இங்கு விரிவுக்கஞ்சி விடுத்தனம். அந்தக் காரணத்தை இன்னதென்று வேதம் விளக்குகின்றது, அது ஒரு பிரமாணத் தாலுமறியப்படாதது. ஒரு பிராமணத்திற்கும் விரோதிக்காதது. வேறு பிரமாணத்திற்கு விஷயமானாலன்றோ அத்துடன் விரோதிக் கின்றதா இல்லையா என்ற விசாரம் நிகழும். எந்த வஸ்து எந்தப் பிரமாணத்தாலறியப்படுமோ அந்த பிரமாணத்திற்குதான் அதன் விரோதா விரோதங்கள் விஷயமாகும். அதெப்படியெனில் கண் ணினால் ரூபங்களைப் பார்க்கின்றோம்.

அந்த ரூபம் வாயு, ஆகாயமிவைகளிலிருப்பது விரோதமா அன்று என்ற ஆசங்கை நிகழும்போது அது கண்ணினாலேயே தீர்மானிக்கவேண்டிய விஷயமே தவிர காது, மூக்கு, நாக்கு, துவக் என்ற புலன்களால் தீர்மானிக்க முடியாது. அதுபோல் வேதத்தால் மாத்திரமறியப்படுமிந்த விஷயம் வேறு பிரமாணங் களுக்கு விஷயமாகாது. அந்த விஷயம் பயனுள்ளதுமாகின்றது. யாது பயனெனின் கூறுவாம். எது சுகசாதனமோ அதை அறிந்து கிரஹிப்பதும், எது துக்கத்திற்கு ஸாதனமோ அதை விலக்குவதுந் தான். ஆகையால் வேதத்திற்குக் குறிப்பிட்ட பிராமாண்யம் சித் திக்கின்றது. கீழ்க்காட்டிய சில வாக்கியங்களிலப்படிக் காணோ மென்றால், அந்த வாக்கியங்களில்லாவிடில் பிரமாண லக்ஷண முள்ள வாக்கியத்திற்கென்னதோஷம். இந்த வாக்கியம்போலந்த வாக்கியங்கள் பிரமாணமாகா என்பது உசிதமன்று. கீழ்க் காட்டிய சில வாக்கியங்கள் பிரமாண மன்று எனத் தீர்மானித்து விட்டால் அதுபோலிது அப்பிரமாணமெனலாம். இன்னுமது தீர் மானிக்கப்படவில்லை, அந்த வாக்கியங்களும் பிரமாண வாக்கியங் களே. அதெப் படியெனில் அந்த வாக்கியங்கள் அர்த்தவாத வாக்கியமெனப்படும். அவை விதிவாக்கியத்தாலபேக்ஷிக்கப்பட்ட ஸ்துதி நிந்தை முதலியவற்றை லக்ஷணாவிர்த்தியால் போதித்து அந்த விதிவாக்கியங்களோடு ஏகவாக்கியங்களாகிப் பிரமாணமா கின்றன என்று அர்த்தவாதாதிகரணத்தில் பூர்வமீமாம்ஸையில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதன்விரிவு “வேதவிபாகம்” என்ற பிரஸங்கத்திற் காண்க. இந்த வேதம் பிரமாணமாயின் பௌத்தர், ஜைனர் முதலாயினோர் புத்ததேவர், ஜினர் முதலியவர்களாலியற் றப்பட்டதாகக் கொண்ட புத்தாகமம், ஜைனாகமம் முதலிய ஆக

மங்களும் பிரமாணமாகலாமேயெனின். ஆகாது. இவ்வாசங்கை செய்பவரின் வார்த்தையினாலேயே அவ்வாகமங்கள் அப்பிரமாணங்களென்றேற்படுகின்றது. எங்ஙனமெனில் அவ்வாகமம் புத்ததேவனாலியற்றப்பட்டதாக அவர் கூறுகின்றார். ஒரு புருஷனாலியற்றப்பட்டதாயின் அப்புருஷரிடத்துள்ள தோஷம் அவராலியற்றப்பட்ட வாக்கியத்திலும் ஆரோபிக்கப்படுமாதலினது பிரமாணமாகாது. சப்தப் பிரமாணத்திற்கு பிரத்தியக்ஷாதிகளைப்போல் ஸ்வ பாவ தோஷமில்லை. அந்த சப்தத்தையுச்சரிப்பவனிடத்துள்ள தோஷம் சப்தத்தின்மீது ஆரோபிக்கப்பட்டு சப்த தோஷமென லௌகிகர்களால் வியவகரிக்கப்படுகின்றது. அது சப்ததோஷமாகவேயிருக்குமாயின் அதற்கு பொருளை விளக்கும் சக்தியில்லாமற் போகவேண்டும். அப்படியில்லை. அந்த சப்தமும் பொருளை போதிக்கின்றதென்பது அனுபவசித்தம். அதனாற்றான் உலகத்தில் ஒருவார்த்தையைக் கேட்டவுடன் இதையெவர் கூறினர் என்றாலோசித்து அதைச் சொன்னவன் யோக்கியனானால் அது சரியென்று அங்கீகரிக்கின்றனர். அயோக்கியனோ, மூடனோ, பித்துக்கொண்டவனோ சொன்னதாயிருந்தால் அதனைத் தள்ளிவிடுகின்றனர். புருஷரிடத்து பிராந்தி, ஏமாந்துபோவது, வஞ்சிப்பது ஏமாற்றவேண்டுமென ஆசை கொள்வது முதலிய தோஷங்கள் சம்பவிக்கின்றன. அதுபோல் புத்ததேவனுமோர் புருஷனாதலால் அவரிடத்துமித்தோஷங்களிருக்கலாம். அவர்உலகத்தை ஏமாற்றவெண்ணியே ஆரியவேதத்திற்கு விருத்தமான இவ்வாகமத்தை இற்றியிருக்கலாம்.

புத்ததேவர் முதலாயினோர் தன் ஆகமங்களில் முன்னுக்குப் பின் விருத்தமாகக் கூறியிருப்பதே அவரது பிராந்தியை வெளியிடுகின்றது. உலகத்தை ஏமாற்றிக் கெடுப்பானா என்று நினைக்க வேண்டாம். தான் கெட்டாவது பிறரைக்கெடுக்க எண்ணங்கொண்டவர் பலரைக் காண்கிறோமன்றோ, இங்ஙனமே நீதியில் ஒரு சுலோகமுண்டு. அதன் பொருளையுரைப்பாம். சிங்கம், புலி, காடி, முதலிய துஷ்டஜந்துக்களடர்ந்த காட்டில் அச்சமற்று நிற்குமொருவனைக்கண்டு ஒரு கூட்டமாய் வந்த பலர் கேட்கின்றார்கள்—“அடாமூடா ? நீயார், யான் துஷ்டசிரோமணி. இந்த கோரமான காட்டிலேன் நிற்கிறாய். சிங்கம், புலி, செந்நாய் முதலிய மிருகங்கள் என்னைத் தின்னட்டுமென்ற எண்ணத்தால் நிற்கிறேன்

அடா என் சரீரத்தை இழக்கிறாய், மனிதர் மாம்சத்தைத் தின்று
பழக்கமில்லாமையால் நாட்டில் வந்து மிருகங்கள் மனிதர் மாம்
சத்தைத்தின்னவில்லை. என் சரீரத்தின் மாம்சத்தைத் தின்றாவது
மனிதர் மாம்சத்தில் ஆசைகொண்டு மனிதரெல்லோரையும் தின்
னட்டுமென்ற எண்ணத்தால் சரீரத்தையிழக்கின்றேன்" என்றான்.
இங்ஙனம் உலகத்தைக் கெடுக்க முயலுவோருமுண்டு. இவ்வாறு
தோஷமுள்ள புத்தர் முதலானவர்களாலியற்றப்பட்ட ஆகமம்
பிரமாணமற்றதே. புத்ததேவன் தோஷமற்றவர் ஸர்வக்ஞ
ரென்றால் ஜினர் ஸர்வக்ஞரன்றோ. இவருக்கு விருத்தமாய் அவர்
கூறுவதற்குக் காரணம் யாது. அன்றியும் இவர் ஸர்வக்ஞரென்
பதற்குப் பிரமாணம் யாது. அவர் வார்த்தைதானெனில் இது
அன்னியோன்னியாசிரயதோஷமாகும். அவர் ஸர்வக்ஞரானாலவர்
வார்த்தைபிரமாணமாகும். அவர் வார்த்தைபிரமாணமானால் அவர்
ஸர்வக்ஞராவர். மூக்கறையன் கதை மாதிரி உலகத்தைக் கெடுக்க
எண்ணியவர் தன்னை ஸர்வக்ஞரென்றுதான்சொல்லிக்கொள்வார்.
தன்னைமூடனென்றுயாவரேனும் சொல்லுவாருண்டோ? அப்படி
சொல்லும் அவர் வார்த்தையைப் பகுத்தறிவுடையோர் யாவர்
நம்புவர். ஆகையால் புத்தாகமாதிகள் பிரமாணமாகாது.

இங்கு சிலாசங்கையிது—ஆரியவேதமெவராலியற்றப்பட்
டது. ஒருவராலுமியற்றப்படவில்லை. அனாதியாயுள்ளது என்
பது பொருந்தாது காடகம், காபாலகமென்று வேதபாகத்திற்கு
பெயரிருக்கின்றது. அதனால் அந்தவேதம் கடர், கபாலரென்று
பெயர்கொண்ட ஒரு புருஷனால் செய்யப்பட்டதாகத் தோன்று
கிறது. அனாதியான அந்த வேதத்தை கடரென்பவர் சிஷர்கட்
குக் கற்பித்தனாதலாலவர் பெயரால் அந்த வேதபாகம் வழங்கப்
படுகின்றது என்பதும் சரியன்று. அங்ஙனமாயின் புத்தாதி ஆக
மங்களும் அநாதியாயுள்ளது. அது புத்தரால் சிஷர்களுக்கு
போதிக்கப்பட்டமையால் புத்தாகமமென்று வழங்கப்படுகின்றது
என்றுங்கூறலாமன்றோ. அன்றியும் ஆரியவேதம்அனாதியென்பது
கூடாது. "பப்ருவாஹனரின் புத்திரன் விரும்பினார், உத்தாலகரின்
புத்திரன் விரும்பினார்." என்பதாதி பொருளை விளக்கும் வாக்யங்
கள் வேதத்திற் காணப்படுகின்றன. அவைகள் பப்ருவாஹனரு
க்கும், உத்தாலகருக்கும் புத்திரனுண்டாவதற்கு முன்னிருந்த
தன்று. அவர்கட்குப் புத்திரனுண்டான பின்னரெழுதப் பட்ட

தாகத் தெரிகிறது. ஆரியவேதத்திலும் முன்னுக்குப்பின் விரோதம் வெகுவாயிருக்கின்றது— "கர்மானுஷ்டானத்தாலழிவற்ற ஸுகிருதமுண்டாகிறது" கர்மானுஷ்டானத்தை அழிவற்ற புருஷார்த்த ஸாதனமாகக்கூறி பின்னர் "கர்மானுஷ்டானத்தால் மோக்ஷம் பெறமுடியாது" என்று அதற்கு விருத்தமாய் கூறியிருக்கின்றது. இங்ஙனமே ஸிருஷ்டி முதலிய விஷயங்களில் பல விரோதமிருக்கின்றன. சில விடத்து வேதம் பித்தனைப் போல சேதனுசேதன வேற்றுமையின்றி கூறுகின்றது. "வநஸ்பதிகள் (விருக்ஷங்கள்) ஸத்திரமென்ற யாகம் செய்தன. ஸர்ப்பங்கள் ஸத்ரயாகம் செய்தன. பசுக்கள் செய்தன" என்று இவைகள் எங்ஙனம் பொருந்துமென்று சிலர் நினைக்கின்றனர், இவ்வாறு சங்கைக்கு சமாதானம் மேல் ஸஞ்சிகையில் கூறுவாம்.

பத்திராதிபர்.

---

# ஸ்ரீமீனாக்ஷி பரிணயம்.

(529-வது பக்கத்தொடர்ச்சி)

அப்படியே என்று அவனுடைய வார்த்தையை ஒப்புக்கொண்டு ஸஜ்ஜனஞ் செய்யப்படட்டும் என்று சேனையை யேவிவிட்டு சிவபெருமானின் அங்கசம்பந்தத்தால் பயனடைந்த கங்கையை மறுபடியும் தன்னியமாக்கிக்கொண்டு நீராடினாள். பாண்டிய குமாரீ ஜலத்தில் தோழிமார்களோடு விளையாடிவிட்டு முழுகி நித்திய கன்மாமுடித்துபின்பு அனேகாயிரந்தோணிகளால் நெருக்கமாகச் சேர்க்கப்பட்ட அணையால் அந்நதியை முதலில் தாண்டினாள். இவளுடைய சேனையும் கங்கையில் நீராடிற்று. நீருமருந்திற்று. அச்சேனை இரவுபகலுமாக மூன்று நாட்களில் மீதியில்லாமல் கங்கையின் அக்கரையையடைந்தது. பனிமலையின் கொடிமுடிகளில் தாவிக்கொண்டும், மேடுபள்ளங்களை சிறிதேனும் கவனியாமலிருந்துகொண்டும், தேர்களின் நுகத்தடிகளில் பூட்டப்பட்ட அச்வங்கள் தேவியின் நேத்திரப்பார்வைகளாகிற கயிறுகளால் இழுத்துப் பிடிக்கப்பட்டு, சுகமாகச்சென்றன.

அப்போது அங்கு, அவிழ்ந்த கஞ்சுகத்தையுடையதும், நாணேற்றப்பட்ட வில்த்தடியையுடையதும், தூக்கிக்கட்டப்பட்ட

கூந்தலில் வைக்கப்பட்ட காட்டு மலர்களையுடையதும், சேனைகளினு லுண்டாக்கப்பட்ட புழுதியோடு சேர்ந்த கூந்தலால் அழகுவாய்ந் ததாயுமுள்ள அந்த பாதத்துவம், வேடர்களாலும் காணப்பட் டது. அங்கு பனி மலையிலுள்ள கிராதர்கள் முத்துமாலைகளைக் காணிக்கைகளாகவைத்து, மலைப் பிரதேசங்களை காண்பித்துக் கொண்டு தேவியைச் சேவித்தனர். பிறகு அந்தசேனை வழியில் லாத பனிமலையின் கொடிமுடிகளிலும், கங்கையை அனுஸரித்து சென்றனர்

பிறகு இவ்விதம் ஹிமாலயத்தின் கொடிமுடியிலிருந்து மெதுவாவாக இறங்கி, கிம்புருஷ வர்ஷத்தில் களைப்பாறின அச் சேனை, தாகத்தாலோ, பசியாலோ, வழிகடந்த சிரமத்தாலோ, உஷ்ண நீராலோ அவதிப்படவில்லை. அம்மீனாக்ஷீ அங்கு முனிவர் களால் கொடுக்கப்பட்ட, கிழங்கையோ, கனியையோ நீரையோ ஏற்றுக்கொண்டு புசித்தாள், அவள் அதைத்தாண்டி ஹேம கூடத்தையடைந்து, அவ்வழியாக ஹரிவர்ஷத்தையுமடைந்து, அதற்கு வடக்காக கிழ்மேற்கு சமுத்திரங்களின் அலைகளால் மோதப்படுகிற நிஷதமலையில் ஏறினாள். அம்மலையில் மேற்குப் பாதையில் செல்கின்ற அவள் மேருவைச்சுற்றி யக்ஞரூபியான வாராஹப்பெருமாளுக்கு, வாஸஸ்தலமான கேதுமாலத்தில் கொடி களின் வரிசைகளைத்தூக்கி நிற்கின்ற சேனையை நிறுத்தினாள்' பிறகு அவள் பக்தியால் பகவானை வணங்கி, அவரால் காண்பிக் கப்பட்ட பாதை வழியாக நீல மலையையடைந்தாள். பிறகு ரம் யகத்தைத்தாண்டி, ஹிரண்மயம், ச்வேதம் என்ற இரு மலைகளை யுந்தாண்டி, உத்தரகுருதேசத்தையடைந்து அப்பாண்டியகுமாரி, பரிசுத்தமாய் மத்ஸ்யாவதார ரூபமான பகவானை வணங்கினாள்.

பிறகும் அவள் அவரால் காண்பிக்கப்பட்ட அலைமோது கின்ற சமுத்திரத்தைக்கண்டாள். எவ்வளவுக்குள் தேவியான வள் சமுத்திரத்தினிடமிருந்து காணிக்கை வாங்குவதற்கு விரும் பினாளோ, அவ்வளவுக்குள் சமுத்திரம் காணிக்கைகளை எடுத்துக் கொண்டு, அவளைச்சரணமடைந்து சொல்லியதாவது—தாயே; இந்த கஜ ராஜங்கள் மைனாகமலையிலுள்ளவை. இந்த சங்குகள் மேற்கு சமுத்திரத்திலிருந்து கொண்டுவரப்பட்டவை. இந்த மச் சங்களும் ஆமைகளும் பக்குவமானவைகளும் காய்ச்சப்பட்ட வைகளுமான கற்கண்டுகளும் கரும்புக்கடலிலிருந்து எடுக்கப்

பட்டன. இந்த ஹைஹயங்கவீன மகாங்கள் நெய்க்கடலிலிருந்து கொண்டுவரப்பட்டன. கிழத்தனம், நரை, வியாதி இவை முதலானவைகளைப் போக்குகின்ற மணமுள்ள இந்தசாராயம், ஸுரா சமுத்திரத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. இந்த வெண்ணெய், தயிர்க்கடலிலிருந்து கொண்டுவரப்பட்டது, பரிகளும் யானைகளும் திருப்பாற்கடலால் கொடுக்கப்பட்டன. சமுத்திரத்திலுண்டாகின்ற திவ்வியமான ரத்தின ஜாதிகளில், கௌஸ்துபம், சிந்தாமணி என்ற இரண்டு மணிகள் உலகில் பிரசித்தமானவை. இந்த ஹாரலதை ஆச்சரியமானது. எனது பெருமைக்காக விவாஹ காலத்தில் இதை நீ வஹிக்கவேண்டும்—என்று.

இவ்விதம் காணிக்கைகளைத் தெரிவித்து ஹாரத்தையும் கொடுத்து முன்னால் வணக்கத்துடன் பணிந்த அந்த சமுத்திர ராஜனை சுமதியால் உயரக்கிளப்பி யாதொரு காரணத்தால் நீஎனது தோழியான லக்ஷ்மிக்கு தகப்பனாகிறாயோ, ஆகையால் தர்மத்தாலும் நீ எனக்குத் தகப்பனாகிறாய். ஆகையால் உன்னால் இந்த ஆபரணம் கொடுக்கப்பட்டது" என்று சொல்லிக்கொண்டு கடாக்ஷசந்திரிகைகளால் அவனைப் போஷித்தாள். அம்மீனாக்ஷி அவனை விட்டுவிட்டு, பூர்வர்ஷமான பத்ராச்வத்தையடைந்து அங்கு ஸீதா நதியைத்தாண்டி, அந்நதிக்கரையின் எல்லையில் தவஞ்செய்கின்ற ஆதி புருஷனான ஹயக்ரீவனை வணங்கினாள். ஹயக்ரீவபகவானிடமிருந்து முன்னால் தடையில்லாத விஜயத்தைவரமாக அடைந்து அவள் ஜம்பூநதியிலுண்டான இளாவிருதத்தைக் கண்டாள்.

பாரத வர்ஷவிஜயம் என்ற மூன்றாவது தரங்கம் முற்றிற்று.

---

## இந்திராதி திக்பால விஜயம் என்ற நான்காவது தரங்கம்.

பிறகு மேருவின் கொடிமுடிகளிலுள்ள திக்பாலகர்களை வெல்லக்கருதின தடாதகாதேவீ, சேனைகளோடுகூட ஸ்வர்கத்திற்குக் கிளம்பி திடீரென்று அவள், ஸ்வர்கஞ்சென்று அமராவதியைச் சூழ்ந்துகொண்டாள். அவ்வளவுக்குள் அங்கு பெரும் போர் ஏற்பட்டது. நீ என்ற சப்தத்தாலும் ஹுங்காரத்தாலும், பயமுறுத்தப்பட்ட தேவர்கள், தங்களுக்கும் மானிடர்கட்குமுண்டான அவஸ்தாபேதத்தைக் கண்டு, வீண்மூச்சு விட்டனர்,

ஜலத்தில் மணலாலாக்கப்பட்ட அணைகள் சிதறிப்போவதுபோல், அத்தேவர்கள் தளர்ச்சியையடைந்தார்கள். இங்ஙனங்கும் ஓட்ட மெடுக்கிற தேவசேனையையடக்க வன்மையற்ற இந்திரன், தானே முன்னின்று போர்புரியத் தொடங்கினன். ஸுமதி முன்னால் சதமகனைக்கொண்டு, அவன்முன் செல்கின்ற அம்பாளின் ரதத்தை நமஸ்காரத்தாலும், சமாதான வார்த்தைகளாலும் தடுத்து, தானே முன்னின்று போருக்குத் தொடங்கினன். 'மீனாக்ஷி தேவிஜயிக்கிறாள்' என்ற ஒரு மந்திரத்தையே சொல்லிக்கொண்டு, இந்த சுமதி அம்புகளை பிரயோகித்ததால் இந்திரனுடைய திவ்வியாஸ்திரங்கள் யாவும் வீணாயின. அந்தசுமதியின்சரங்கள் யாவுமே கண்களால் நிறைந்த சரீரமுள்ள தேவநாயகனின் மர்மஸ்தானங்களில் நுழைந்தன. அச்சமயத்தையறிந்து, சேனையிலுள்ள படர்கள், இந்திரனுடைய வஜ்ராயுதத்தையும் அபகரித்தனர். சேனைத்தலைவர்களால் பலாத்காரமாகவே லோகமாதாவின் முன் நிறுத்தப்பட்ட மஹேந்திரன், வெட்கத்தால் தூண்போல்நின்றான், பிறகு கால்களில் விழுந்த வாஸவன், அம்மீனாக்ஷிதேவியால் பார்க்கப்பட்டு, முன்போல் ஸ்வபாவத்தையடைந்து, சுமதியால் அநுமதிக்கப்பட்டு, அவ்வம்பாளைப்பார்த்து கூறினன்—

தேவியே! இது தேவலோகப்பசு; இதோ அப்ஸரஸ்ஸுகளின் கூட்டம் இந்த விருக்ஷங்கள் ஐந்தும் கற்பகதருக்கள், இந்தப்பெரிய ரத்தினம் சமுத்திரத்திலுண்டானது. இது ஐராவதம், இது சிறந்த குதிரை, நீ இவைகளை ஏற்றுக்கொள். தேவலோகத்து ஐச்வர்யத்தோடுகூட, இந்த ஸ்வர்க்கலோகம் உன் சரணத்தில் வைக்கப்பட்டது—என்று.

பிற்பாடு அவள் "இந்திரனே; உன்னால் கொடுக்கப்பட்ட அவையாவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இங்கு பிரம்மதேவனுடைய நாள் பூராவாகவும் நீ ஒருவனே சங்கையில்லாமல் இந்திரப்பட்டத்தையனுபவி. சுந்தரப்பெருமானை அபிஷேகம் செய்வதற்கும் பூஜிப்பதற்கும் காமதேனுவையும் கற்பகத்தருக்களையும் என்னோடு அனுப்பு" என்று அவனை விட்டுவிட்டு, முன்னால் பயணமானாள்.

பேரி வாத்தியங்களின் முழக்கத்தோடும், குதிரைகளின் கனைப்புகளோடும், யானைகளின் பிரும்ஹிதத்வனிகளோடும் அம்மீனாக்ஷீ புறப்படும்போது, ஜ்வலிக்கின்ற அக்கினிதேவரும், சாந்த

மாய்விட்டார். ஸுமதியே! போர்செய்யவேண்டாம். "அக்கினி பகவானேவெனில் எனது தகப்பனாராகிறார்" என்று அவள் மந்திரிக்குக் கட்டளையிடுவதற்குள்ளேயே, பெண்ணைப்பார்க்க விருப்பத்துடன், மங்களத்திரவியங்களான காணிக்கைகளை எடுத்துக்கொண்டு, அக்கினி பகவான் முன்னால் வந்தார். சந்தோஷங்கொண்ட அந்த தடாதகாதேவியும், அக்கினி பகவானைவணங்கி, அடிக்கடி அவரால் வேண்டிக்கொள்ளப்பட்டு, அந்த காணிக்கைகளை ஏற்றுக்கொண்டாள், உனது பாணிக்கிரஹண சமயத்தில் விரைவில் நான் ஸாக்ஷியாக இருப்பதற்கு வேண்டிக்கொள்கிறேனென்று அக்கினிதேவர் கேட்டபோது, புன்சிரிப்புக்கொண்ட அந்த மீனாக்ஷி அவரை யனுப்பிவிட்டு முன்பு செல்லத்தொடங்கினாள்.

"மதுரை நகரில்வாழும் பிராணிகளின் பார்வைகளில் விழவேண்டாம்" என்று தர்மாராஜனால் அறிவிக்கப்பட்ட யமபடர்கள் அச்சேனையைப் பார்த்தும் ஓடத்தலைப்பட்டனர், "பக்தர்களின் பார்வைகளில் விழுந்தவர்களுக்கு இந்த கதிதான் என்பது லோகமாதாவின் மஹிமை." உலக்கை, பாசம் இவைகளைக் கையில்வைத்துக்கொண்டிருக்கின்ற படர்களாலும் ரோகங்களாலும் நான்குபுறமும் சூழப்பட்டு, வழியில் தூரத்திலேயே அஞ்சலிபந்தம் செய்கின்ற சூரிய குமாரனை யமனை, தடாதகாதேவி கண்டாள். அந்த தர்மாராஜன் ஸுமதியின் அனுமதியால் வந்து, அவளை வணங்கி எழுந்தவனாய் எங்கும் குறிதவாத தனது கதையை (கெதா) எடுத்துக்கொண்டு, வணக்கத்துடன் இவ்விதம் வார்த்தை சொல்லத்தொடங்கினான்—உமக்கு அதீனமான பாரதபூமியில் பாபஞ்செய்கின்றவர்கள் இல்லை, நரகத்தில் முன்பு புறப்பட்டவர்களும் கரையேற்றப்பட்டனர். இவ்விதம் என்னால் இங்கு ஸாவகாசம் எடுத்துக்கொள்ளப்பட்டது. தேவியே! வேலையில்லாதவனாயிருக்கிறேன். இங்கு இருப்பதால் எனக்கு என்ன? சேனாமுகத்தில் சேனையோடு சஞ்சரிக்கிறேன். உனது விரோதிகளிடத்தில் என்னை அனுப்பு—என்று. அப்போது சுமதி, எங்களைப் போரில் எதிர்ப்பவர் இல்லை. எவ்விதத்தாலும் உனக்கு ஸாவகாசம் எடுத்துக்கொள்வதே தகுந்தது என்று அந்த யமதர்மனைக் குறித்துச் சொன்னான். பிற்பாடு அவள் தர்மாராஜனைத் திருப்பிவிட்டு, பின்பு மெள்ளமெள்ளப் புறப்பட்டாள்.

அதற்குள்ளேயே சேனையோடும் பந்துக்களோடும் கூடின நிருதி (निर्ऋतिः) காணிக்கைகளை எடுத்துக்கொண்டு வந்தான். இப்போது புண்யஜனர்களானேம் (ராக்ஷஸனென்பது மறைபொருள்) என்றுவணங்கின இவனை விட்டுவிட்டு அவள் வருணனுக்கு எதிராகச் சென்றாள்.

சமதிக்கு முன்னால் போகிற சேனை சலிக்கிற திமிங்கிலங்கள் இவைகளால் பயங்கரமாய் உள்ளதும் முதலைகள், ஆமைகள், நண்டுகள் இவைகளால் நிறைந்ததுமான வருண சைனியத்தை முன்னால் பார்த்தன. அச்சேனை வலைகளையும் தூண்டில்களையும் எடுத்துக்கொண்டு தயாராயிற்று. வருணன் அநேக வெகுமதிகளை எடுத்துக்கொண்டு தடாதகாதேவியிடம் சரணம் புகுந்தான். அவள் வருணனுடைய காணிக்கையைக்கண்டு, ஏற்றுக்கொண்டு வணக்கமுள்ள அவனை அனுப்பிவிட்டு வாயு நகருக்கு முன்பாக புறப்பட்டாள்.

அச்சேனை, மெள்ளமெள்ள ஸ்வரூபத்தைக்காண்பிக்கத்தலைப்பட்டவைகளும், ஆகாயகங்கையின் ஜலசம்பந்தத்தால் சீதளமாயும் இருக்கிற வாயுக்களால் மரியாதையாகச் சேவிக்கப்பட்டது. மற்ற வாயுக்கள் தென்னல்காற்றை முன்னிட்டுக்கொண்டு பாரிஜாதபுட்பங்களைக் காணிக்கையாகக்கொண்டு சமதியால் அநுமதிக்கப்பட்டு அவ்வம்பாளை சேவித்தன. மந்திரி அவைகளைத் தனித்தனியாகக் காண்பித்து, அவளைப் பார்த்துக் கூறியதாவது—

“தேவியே! இது நமது மலய மலையிலுள்ளகாற்று இவைகள் சுழல்காற்றுகள் சமுத்திரம் இவைகளால் தத்தளிக்கிறது. இவைகள் பிரளயகாற்றுகள் மரங்களையும் கொடிகளையும் முறிக்கிறமேற்குக்காற்றுகள். இவைகள் கனமான பனிகளை வர்ஷிக்கின்ற வடக்குக் காற்றுகள். பிரியகம் சாதகம் என்ற பக்ஷிகளுக்குப் பிரியமான கீழ்காற்றுகள். பூதலத்தில் பாம்புகள் காற்றை சாப்பிடுகின்றன. ஆகாயத்தில் இவைகளை சுமைசுமக்க உபயோகிக்கின்றனர். உனது தேசத்திலே அவைகள் சுகமாய் சஞ்சரிக்கின்றன”—என்று. இவ்விதம் காண்பிக்கப்பட்டு அவளால் தயவோடு ஆதரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட காற்றுகள் தங்கள் நகருக்குத் திரும்பினர்.

பிறகு மெதுவாக அத்தடாதகை, குபேரனை ஜயிப்பதற்காக பயணமானாள். அதற்கும் முந்தியே தங்கம் இரத்தினம் இவை

களின் குவியலோடு கூட வழியில், அக்குபேரன் ஸஜ்ஜனுயிருந் தான். உடனே சரணங்களில் விழுந்து எழுந்தவனுன அந்த யக்ஷராஜனை அவள் தயை கூர்ந்த பார்வையால் அனுக்ரஹித் தாள். தாயாரே! சங்கு முதலான எட்டு நிதிகள் என்னால் கொண்டுவரப்பட்டன. உத்தமமான அந்த வானுேவெனில் முன் ஞல் அடையப்படப்போகிறது. சில அடிகள் செல் என்றுசொல் கின்ற அக்குபேரனை அனுப்பிவிட்டு பிரமதநா,னின் சந்நிதிக்கு பயணப்பட்டு அவருடைய அளவில்லாத சேனையையும் பொருட் படுத்தாமல் தான் சண்டைக்குத் தயாரானுள்.

இந்திரன் முதலான எழு திக்பாலர்களின் விஜயம் என்ற நான்காவது தரங்கம் முற்றிற்று.

---

## ஈசானவிஜயம் என்ற ஐந்தாவது தரங்கம்.

அந்த தடாதகா தேவியின் சேனை கைலாயத்தின் சமீபத்தில் தங்கி, யானைகளின் பிரும்ஹித த்வனிகளோடும் பேரீ முழக்கத் தோடும், குதிரைகளின் கனைப்போடும் கூடின சிங்கநாதத்தைச் செய்தது. இந்த நாதத்தைக் கேட்டு நந்திதேவர் சினங்கொண் டார். புராரியான சிவபெருமான் சந்தோஷங்கொண்டார். நந்தி தேவர் தனது பிரமத சேனையோடு சூழ்ந்து கொண்டு சூலபாணி யின் சமீபஞ்சென்று மானிட சைன்யத்தின் வரவால் ஜ்வலிக் கின்றவர்போல் சொல்லத்தொடங்கினுர்— மஹேசரே! உம்மி டத்தில் கர்ப்பம் முதற்கொண்டே குலதாஸர்களாய்இருந்த பாண் டிய நாட்டு மன்னர்களில் குலசேகரனையும் அவனது குமாரன் மலயத்வஜனையும் நன்கு அறிவீர். அவனது பெண்ணுன தடா தகை என்பவள் சிறிது இளம்பிராயம் நீங்கப்பெற்று புல்கட்டுப் போலுள்ள மானிடசேனையைச் சேர்த்துக்கொண்டு இங்கேயே எதிர்க்க வருகிறுள். மானிடர்களுக்கு ஈடுபடுகின்ற சில அற்ப தேவர்களிடம் பராக்கிரமத்தைக்காண்பித்த அப்பெண் என்னையும் பொருட்படுத்தவில்லை, அவளை பூதலத்தில் ஓட்டிவிட்டு அவளைச் சார்ந்தவர்களையும் தண்டிக்கவேண்டும்—என்று. (தொடரும்)

K. V. சுப்பிரமணிய சாஸ்திரி.